**புதுச்சேரி அரசு**
**வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**கூடுதல் வேளாண் இயக்குனர் (தோட்டக்கலை) அலுவலகம்**
**தாவரவியல் பூங்கா, புதுச்சேரி**

**செய்திக் குறிப்பு**

**தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் பிந்தைய மானியம் பெறும் விண்ணப்பம்**

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, தோட்டக்கலை பிரிவில் உள்ள தேசிய தோட்டக்கலை இயக்கம் (NHM) மூலமாக காய்கறி மற்றும் பழ சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

இவற்றின் ஓர் அங்கமாக ஒருங்கிணைந்த பூச்சி மற்றம் ஊட்டச்சத்து மேலாண்மை, தோட்டக்கலை இயந்திரமயமாக்கல் மற்றும் சிறப்பு திட்டத்தின் மூலமாக புதுச்சேரி மாநில தோட்டக்கலை விவசாயிகள் பயன் பெறும் வகையில் உயிர் உரங்கள்/உயிர்க்கொல்லி மருந்துகள், விசைத்தெளிப்பான், விளக்குப்பொறி, காய்கறி, பழகூடைகள் மற்றும் மண்புழு உரம் தொட்டி அமைத்தல் ஆகியவற்றிற்கு மானியம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்விண்ணப்பங்களை தாவரவியல் பூங்காவில் இயங்கும் கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) அலுவலகம் மூலமாகவோ அல்லது வேளாண் துறையின் இணையதளம் (https://agri.py.gov.in) மூலமாகவோ பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வரும் 20.12.2019 தேதிக்குள் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

22/11

(மு. வேதாசலம்)
**வேளாண் கூடுதல் இயக்குநர் (தோட்டக்கலை)**

O/c
22/11/19